**செ.வெ. எண்: 129** **நாள் : 10.02.2010.**

**பள்ளிக் கல்வித் துறை**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், கனஞ்சாம்பட்டி கிராம உட்கடை வி.மீனாட்சிபுரம் கிராமத்தில் கள்ளத்தனமாக பட்டாசுகள் தயாரிப்பதை தடுக்கும்பொருட்டு **10.08.2010** அன்று வருவாய்துறை மற்றும் காவல்துறையினர் இணைந்து நடத்திய திடீர் சோதனையின்போது ஏற்பட்ட தீ விபத்தில் சிகிச்சை பலனின்றி காலமான கள்ளிச்சத்திரம் வருவாய் ஆய்வாளர் திரு. ராஜ்மோகன் என்பாரின் மனைவி திருமதி எம்.சிவசக்தி என்பவருக்கு கருணை அடிப்படையில் பள்ளிக் கல்வித் துறையில் விருதுநகர் மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகவும், நென்மேனி வருவாய் ஆய்வாளர் திரு. சந்திரசேகரன் என்பாரின் மனைவி திருமதி எஸ்.ரஞ்சிதம் என்பவருக்கு மதுரை மாவட்டத்திலுள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் தையல் ஆசிரியையாகவும் நியமன ஆணை **மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர்** அவர்களால் **10.02.2011** அன்று வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியின்போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு.**தங்கம்தென்னரசு** அவர்கள் மற்றும் பள்ளிக்கல்வி இயக்குநர் முனைவர் **பெ.பெருமாள்சாமி** ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ–9.**